சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

முன்னிலை : திரு.கே. பழனிவேல், பி.எல்.,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 28 ஆம் நாள் வியாழக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் கார்த்திகை திங்கள் 13 ஆம் நாள்)

அசல் வழக்குஎண்.207/2023

CNR.No. TNCB190009092023

1. ஸ்ரீ அங்காளம்மன் திருக்கோயிலுக்காக அதன்

தற்போதைய கமிட்டி தலைவர் திரு. பி.கே.நடராஜன்

2.திரு.பி.கே.நடராஜன்

3.திரு.எஸ்.அங்கண்ணன்

4. திரு.பி.கே. சுப்பிரமணியம்

5. திரு. பி.ஞானசேகர்

6. திரு.எஸ்.டி.தண்டபாணி

7.திரு. ஆர்.நடராஜன்

8. திரு.வி.சுரேந்திரன் என்கிற முருகவேல்

9. திரு.டி.ஏ.முரளிதரன்

10).திரு.வி.அசோக்குமார்

11). திரு.வி.அங்கமுத்து

மேற்படி வாதிகளுக்காகவும் மற்றும்

அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் தெய்வத்தை

வணங்குபவர்களுக்காகவும் .... வாதிகள்

-இடையே-

1. திரு.கே.மணிகண்டன்

2. திரு.கே.வெங்கடேஷ் என்கிற வெங்கடாச்சலம்

3. திருமதி.எம்.சுந்தரம்மாள்

4. திருமதி. டி.நாகேஷ்வரி

5. திரு.எம்.தங்கவேல்

6. திரு.எம்.தர்மன் .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு .சி.கே.நடராஜ், அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் எம் .சதீஸ், அவர்கள் முன்னிலையாகியும், 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு . எம்.ஹரிகிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகியும் 5, 6 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததாலும் 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யாததாலும் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் வாதிகள் தரப்பு வாதத்தைக் கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

01. அசல் வழக்கானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 1 ன் கீழ் 1ம் வாதி கோவிலின் 2 முதல் 11 வாதிகள் தான் தாவா சொத்தில் உள்ள கோயிலின் கமிட்டி உறுப்பினர்கள் என விளம்புகை செய்யக் கோரியும் , 3 மற்றும் 4 ம் பிரதிவாதி வசம் உள்ள அசையும் சொத்துக்களை வாதிகள் வசம் ஒப்படைக்க 3 மற்றும் 4 ம் பிரதிவாதிக்கு எதிராக செயலறுத்துக்கட்டளை கோரியும் , தாவா சொத்தில் உள்ள கோயிலில் திருவிழாக்கள் சமயத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதெனவும் , தாவா சொத்தில் உள்ள கடைகளுக்கு உரிய வாடகைத் தொகையை வாதிகள் வசம் கொடுக்க கோரி 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**02. வழக்குரையின் சுருக்கம் :-**

தாவா வழக்கானது அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் திருக்கோயில் 200 ஆண்டுகள் பழமைவாய்ந்த திருக்கோயில் ஆகும். ஸ்ரீ அங்காளம்மன் தெய்வத்தை செங்குந்த முதலியார், பிராமணர், விஸ்வகர்மா, ஆசாரி மற்றும் பண்டாரம் குலத்தைச்

சேர்ந்தவர்கள் வழிபட்டு வருகின்றனர் , ஸ்ரீ அங்காளம்மன் தேவஸ்தானத்தை வாதியின் மூதாதையர்கள் கட்டினார்கள் . ஸ்ரீ அங்காளம்மன் தேவஸ்தானம் மேட்டுப்பாளையம் தாலூக்கா , இரும்பறை கிராமத்தில் அமைந்துள்ளது . மேற்படி இரும்பறை கிராமத்தில் 170 குடும்பங்கள் உள்ளன . 170 குடும்பங்களில் நான்கு குடும்பங்களை சேர்ந்தவர்கள் ஸ்ரீ அங்காளம்மன் தெய்வத்தை வழிபட்டு வருகிறார்கள்.

இந்தியாவின் பல பகுதிகளில் வசித்து வரும் முதலியார், பிராமணர், விஸ்வகர்மா, ஆசாரி மற்றும் பண்டாரம் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு இரும்பறை கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் குலத்தெய்வமாகும் . சுமார் 140 குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் குலத்தெய்வமாகும். ஆதியில் மேற்படி தேவஸ்தானத்தையும் , தேவஸ்தானத்துக்குரிய சொத்துக்கள் மற்றும் பொருட்களையும் ரங்கண்ண முதலியார் , குழந்தை முதலியார் , ஸ்ரீனிவாச அய்யர், ரத்தினசாமி அய்யர் , சின்னு ஆசார் , அங்கப்பன் ஆசாரி, ஆறுமுகம் ஆசாரி ஆகியோர்கள் பராமரித்து வந்தார்கள் . பூஜைக்குண்டான செலவுகளை மேற்படி நபர்கள் தங்களுடைய சொந்த பணத்திலிருந்து செலவு செய்து வந்தார்கள்.

அங்கண்ண முதலியார்,குமாரசாமி முதலியார் , மருதாச்சல முதலியார், ஜி.வி.ராமரத்தினம் அய்யர், வெங்கட்ராம அய்யர், அலமேலு ராமசாமி அய்யர் , கோபால் ஆசாரி, சுப்பிரமணியம் ஆசாரி, திம்மையன் ஆசாரி, காளியண்ணன் ஆசாரி,முருகன் ஆசாரி, சுப்பைய பண்டாரம், வையாபுரி பண்டாரம் , சுந்தரம் பண்டாரம் ஆகியோர்கள் தேவஸ்தானத்தையும், தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொருட்களையும் தங்கள் சொந்த செலவில் செய்து வந்தார்கள் . பின்னிட்டு மேற்படி தேவஸ்தானத்தையும், தேவஸ்தானத்திற்கு உண்டான சொத்துக்கள் மற்றும் பொருட்களையும் கிருஷ்ணசாமி முதலியார் , -சுப்பிரமணிய முதலியார், செல்வராஜ் முதலியார், நடராஜ் அய்யர் , வெங்கட்ராம அய்யர், லட்சுமி நாராயண அய்யர் , கிருஷ்ணசாமிஅய்யர், பி,எஸ், தன்ராஜ் ஆசாரி, ஜி, வேலுச்சாமி ஆசாரி, டி,தண்டபாணி ஆசாரி, பி,கே,நடராஜ் ஆசாரி , பி,கே, சுப்பிரமணியம் ஆசாரி , ஏ,முருகேசன் ஆசாரி , அங்கமுத்து பண்டாரம் , வெள்ளிங்கிரி பண்டாரம் ,முருகேசன் பண்டாரம் பராமரித்து வந்து அன்றாட பூஜைகளையும் செய்து வந்தார்கள்.

கடந்த 15 வருடங்களாக தேவஸ்தானத்தின் விழாக்களையும், பூஜைகளையும் எஸ். அங்கண்ணன் முதலியார் , டி,ஏ, கோவிந்தராஜ் முதலியார் , டி.ஏ. முரளிதரன் முதலியார், ரோகிணி சங்கர் அய்யர்,கே, வெங்கட்ரமணி அய்யர், வெங்கடசுப்பிரமணியம் அய்யர், ரவி அய்யர் , டி.எஸ். தன்ராஜ் ஆசாரி , ஜி.வேலுசாமிஆசாரி, டி.தண்டபாணி ஆசாரி, பி.கே. நடராஜ் ஆசாரி, பி. ஞானசேகர் ஆசாரி, ஆர்.ராஜு கண்ணு பண்டாரம், வி.அசோக்குமார் பண்டாரம் . வி.செந்தில்குமார் பண்டாரம் ஆகியோர் நடத்தி வந்தார்கள். தேவஸ்தானத்தின் நிர்வாகத்தை தாவா தாக்கல் செய்வதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக வாதிகள் எடுத்துக் கொண்டனர்.

அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மனை தரிசிப்பவர்கள் என்ற முறையில் பல்வேறு குலத்தைச் சேர்ந்த வாதிகள் தங்களுடைய சொந்த உரிமையில் அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் தேவஸ்தானத்தையும் , அதனுடைய சொத்துக்களையும் நிர்வகித்து வந்து கார்த்திகை ஜோதி, பொங்கல், தமிழ்வருட பிறப்பு, ஆடி பெருக்கு, சிவன்ராத்திரி, பௌர்ணமி,அம்மாவாசை, தீபாவளி, தசமி, மார்கழி மாத பூஜைகள் மற்றும் விநாயகர் சதுர்த்தி ஆகிய பண்டிகைகளை ஒவ்வொரு வருடமும் மற்றும் அன்றாட பூஜைகளையும் செய்து வருகிறார்கள். அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் தேவஸ்தானம் தமிழ்நாடு இந்துசமய அறநிலையத் துறைக்கு கட்டுப்பாட்டில் இல்லாத தேவஸ்தானம் ஆகும், அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் தேவஸ்தானத்திற்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் உள்ளன , தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட அசையும் சொத்துக்கள் பின்வருமாறு-

| | | | |
|---|---|---|---|
| 1. | உற்சுவர் | - | ஐம்பொன் |
| 2. | வேல் | - | ஐம்பொன் |
| 3. | மணி (Bell) | - | பெரியது ஐம்பொன் |
| 4. | மணி (Bell) | - | சிறியது ஐம்பொன் |
| 5. | வெள்ளி வேல் | - | 2.1/4 அடி |
| 6. | வைரமூக்குத்தி | - | 1 |
| 7. | மாங்கல்யம் (தங்கம்) | - | 5 |
| 8. | பொட்டு தாலி (தங்கம்) | - | 5 |

| | | | |
|---|---|---|---|
| 9. | வெள்ளி கவசம் | - | 1 |
| 10. | வெள்ளி கிரீடம் | - | 1 |
| 11. | கவசம் ஐம்பொன் | - | 1 |
| 12. | பீரோ | - | 2 |
| 13. | மாங்கல்ய வாத்தியம் | - | 1 |
| 14. | தாமிர அண்டா | - | 1 |
| 15. | வெங்கல மணி | - | 2 |
| 16. | பித்தளைப்பாத்திரம் | - | 2 |
| 17. | பித்தளை குண்டா | - | 2 |
| 18. | பித்தளை பொங்கப் பாத்திரம் | - | 3 |
| 19. | இரட்டை அடுப்பு பெரியது | - | 2 |
| 20. | இரட்டை அடுப்பு சிறியது | - | 1 |
| 21. | 50 கிலோ பாத்திரம் | - | 1 |
| 22. | சில்வர் தட்டு | - | 50 |
| 23. | சிலிண்டர் | - | 1 |
| 24. | சேர் | - | 50 |
| 25. | விறகு அடுப்பு | - | 1 |
| 26. | வெங்கல மணி பெரியது | - | 1 |
| 27. | பித்தளை சொம்பு | - | 10 |
| 28. | சிங்க வாகனம் | - | 1 |
| 29. | பித்தளை வேல் | - | 1 |
| 30. | தட்டம் பெரியது | - | 12 |
| 31. | ஜக்கு | - | 2 |
| 32. | பக்கெட் | - | 5 |
| 33. | கரண்டி | - | 10 |
| 34. | சில்வர் டிரே | - | 1 |
| 35. | அன்னக்கூடை | - | 3 |
| 36. | பெரிய அண்டா | - | 1 |
| 37. | தீர்த்த செம்பு (பித்தளை) | - | 1 |

38. அணையா விளக்கு - 1

அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் தேவஸ்தானத்திற்கு இரும்பறை நத்தம் எண்.1119/2 ல் அசையா சொத்துக்கள் உள்ளன . தேவஸ்தானமானது பழைய காலை எண்.19 ஏ/1 ஏ பார்ட்டிலும், புதிய நத்தம் எண்.1119/2 லும் அமைந்துள்ளது. அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் குடமுழுக்கு விழா கடைசியாக 30.01.2012 ல் விமரிசையாக கொண்டாடப்பட்டது. இந்து சம்பிரதாயப்படி 12 வருடங்களுக்கு ஒருமுறை தேவஸ்தானத்திற்கு குடமுழுக்கு விழா இந்த வருட இறுதிக்குள் செய்தாக வேண்டும். 2012 ம் வருடம் குடமுழுக்கு விழாவிற்கு வசூல் செய்த தொகை முழுவதையும் 3 ம் பிரதிவாதியின் கணவர் தான் கையாண்டார் . தேவஸ்தான கமிட்டி பொருளாளர் முருகேசன் மீது கொண்ட நம்பிக்கையின் பேரில் வசூல் செய்த தொகை அனைத்தும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது . கடை கட்டுமானப்பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் தேவஸ்தானத்திற்கு எந்தவிதமான வருமானமும் இல்லாத காரணத்தினால் அன்றாட பூஜைகளை செய்யமுடியாததால் தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட காலியிடத்தில் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டு அந்த வாடகை தொகையை கொண்டு பூஜைகள் செய்து கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. 3 ம் பிரதிவாதியின் கணவர் ஏ , முருகேசன் மேற்படி பொறுப்புகளை ஒப்படைத்ததை தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு காலியிடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட வரைபட அனுமதியை தன் பெயரில் பெற்று மேற்படி கட்டிடத்தைக் கட்டிக்கொண்டார் . அவ்வாறு தன் பெயரில் பெற்று சொத்து வரியையும் பெற்றுக் கொண்டார் . மேலும் கட்டிடத்திற்குண்டான மின் இணைப்பிற்கு ண்டான மின்சார கட்டணத்தையும் அவரே கட்டி வந்தார்.

மேற்படி காலி இடமானது ஸ்ரீ அருள்மிகு அங்காளம்மன் தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட காலியிடமாகும். கட்டிட அனுமதியை தெய்வத்தின் பேரிலும் மின் இணைப்பையும் தெய்வத்தின் பேரிலும் பெற்றிருக்க வேண்டும் . ஆனால் முருகேசன் தன்னுடைய பெயரில் பெற்றுக்கொண்டார் . முருகேசன் அந்த

காலியிடத்தில் ஐந்து கடை கட்டிடங்களை கட்டி அதற்குண்டான சொத்து வரிவிதிப்பை பெற்று மின் இணைப்பையும் பெற்றுக் கொண்டார் . மேற்படி காலியிடங்களின் வரிவிதிப்புஎண்கள். 1841, 1842, 1843 மற்றும் 1844 ஆகும். மேற்படி கடை கட்டிடங்களின் கதவு எண்கள் .1/250, 1/250 ஏ, 1/250 பி, 1/250 சி மற்றும் 1/250 டி ஆகும், ஏ, முருகேசன் தேவஸ்தானத்திற்கு அருகில் வசித்து வந்த காரணத்தினால் கோயில் நிர்வாக கமிட்டியின் பொறுப்புகளை பார்த்துக்கொள்ள முருகேசனுக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

ஸ்ரீ அருள்மிகு அங்காளம்மன் தேவஸ்தானத்தினுடைய அன்றாட பூஜைகள் விழாக்காலங்களில் செய்யக்கூடிய பூஜைகள் மற்றும் சிறப்பு பூஜைகளை ராம பண்டாரம் செய்து வந்து , அவருக்கு பின்னிட்டு பழனியப்ப பண்டாரம் பூஜைகளை செய்து வந்து, பழனியப்ப பண்டாரத்திற்கு வயதாகிவிட்ட காரணத்தினால் மருதாச்சல பண்டாரம் பூஜைகள் செய்து , மருதாச்சல பண்டாரத்திற்கு பின்னிட்டு தற்போது ஈஸ்வரமூர்த்தி பண்டாரம் தேவஸ்தான பூஜைகளை செய்து வருகிறார் . பின்னிட்டு முருகேசன் என்பவர் வசூல் செய்யப்பட்ட தொகையையும் மற்றும் தேவஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட கட்டிடங்களிலுள்ள வாடகைதாரர்களிடமிருந்து பெறப்பட்ட வாடகையையும் சொந்த செலவிற்கு எடுத்துக்கொண்டார் . கதவு எண்.1/250 சி, 1/250 டி முதல் பிரதிவாதிக்கு வாடகைக்கு விடப்பட்டது.

மேற்படி கட்டிடங்களின் மாத வாடகை ரூ.12,000/- ஆகும். கதவு எண்.1/250 பி, 2 ம் பிரதிவாதிக்கு மாத வாடகை ரூ .6,000/-த்திற்கு வாடகைக்கு விடப்பட்டது . கதவு எண்.1/250 மற்றும் 1/250 ஏ கடைகளில் ஏ . முருகேசன் வியாபாரம் செய்து வந்துதற்போது 3 மற்றும் 4 பிரதிவாதிகள் கடையை ஆக்கிரமித்து வியாபாரம் செய்துவருகிறார்கள். அப்போதைய தேவஸ்தான நிர்வாக குழுவின் அனுமதி பெறாமல் ஏ.,முருகேசன் கதவு எண் .1/250 மற்றும் 1/250 ஏ கடை கட்டிடங்களை 3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் வசம் ஒப்படைத்து விட்டார் . 5, 6 பிரதிவாதிகள் 3, 4 பிரதிவாதிகளின் கையாட்கள் ஆவார்கள் . மேற்படி கட்டிடங்களை வாடகைக்கு விட்டால் மாதம் ரூ .12,000/- வாடகை பெறும் . ஆகவே கடைகளிலிருந்து தேவஸ்தானத்திற்கு மாத வாடகை வருமானம் ரூ .30,000/- ஆகும். ஏ முருகேசன் வாடகைதாரர்களிடமிருந்து அட்வான்சாக ஒரு பெரிய தொகையை

பெற்றுக்கொண்டுள்ளார்.

ஆகவே, தேவஸ்தானத்தின் நிர்வாக குழு முருகேசன் மீது நடவடிக்கை எடுத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்களை சுவாதீனம் எடுப்பதற்காகவும் மற்றும் பொது மக்களிடமிருந்து தேவஸ்தானத்தின் பெயரில் பணம் வசூல் செய்வதையும் , தேவஸ்தானத்தின் கடைகட்டிடத்தில் வாடகை வசூல் செய்வதையும் தடுக்கநடவடிக்கை எடுக்கப்பட்டது. தேவஸ்தானத்தின் நிர்வாக குழு உறுப்பினர்கள் இதை பொறுத்து இந்துசமய செயலாளரிடமும் , மந்திரிகளிடமும் மாவட்ட ஆட்சியரிடமும் இரும்பறை பஞ்சாயத்து தலைவரிடமும் , மின் வாரியத்திடமும் புகார் கொடுக்கப்பட்டது. ஆனால் யாரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை , தேவஸ்தானத்திற்காக பொது மக்களிடம் வசூல் செய்த பணத்தையும் வாடகையையும் முருகேசனே தன்னுடைய தனிப்பட்ட செலவுகளுக்கு வைத்துக் கொண்ட காரணத்தினால் அன்றாக பூஜைகளை உறுப்பினர்களே தங்களுடைய சொந்த பணத்தைக் கொண்டு நிர்வாகம் செய்து வருகிறார்கள்.

3ம் பிரதிவாதியை வாரிசாக விட்டு முருகேசன் இறந்துவிட்டார் . அவர் இறந்ததற்கு பின்னிட்டு முருகேசனின் மனைவி 3ம் பிரதிவாதி தான் மட்டும்தான் தேவஸ்தானத்திற்கு பொறுப்பு என்று கூறி பரைச்சாற்றி வந்தார் . தேவஸ் தானத்திற்கு பூஜைகள் செய்ய 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது . 3 முதல் 6 பிரதிவாதிகள் பணபலம் மற்றும் அரசியல் பலம் கொண்டவர்கள் என்பதால் சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டு வாதிகள் செய்யும் பூஜைகளை தடுப்பதற்கு முயற்சி செய்து வருகிறார்கள் . பொது மக்களிடமிருந்து வசூல் செய்யும் தொகைகளையும் , வாடகைதாரர்களிடமிருந்து வசூல் செய்யும் வாடகையையும் தேவஸ்தானத்திற்கும், தெய்வத்திற்கும் செலவுசெய்ய வேண்டுமே தவிர தன்னுடைய தனிப்பட்ட செலவினங்களுக்கு செலவுசெய்யக்கூடாது . தேவஸ்தானத்திற்கு தனியாக வங்கி கணக்கு கிடையாது,

2024 வருட இறுதிக்குள் குடமுழுக்கு விழா நடத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளதால் 3 முதல் 6 பிரதிவாதிகளின் தயவை எதிர்பார்க்கும் சூழ்நிலையில் உள்ளதால் பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் பல்வேறு குலத்தைனுடைய

தலைவர்களும் சேர்ந்து அமைதியான முறையில் தேவஸ்தானத்தை நடத்துவதற்காக முயற்சிகள் எடுத்தும் 3 முதல் 6 பிரதிவாதிகள் ஒத்துழைக்காத காரணத்தினால் அவர்களுடைய முயற்சிகள் அனைத்தும் பலனற்று போனதால் வாதிகள் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளார்கள்.

பிரதிவாதிகளை 02.01.2024 மற்றும் 11.03.2024 ம் தேதிகளில் அழைத்தும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

வாதிகள் தரப்பில் 2 ம் வாதி வா .சா. 1 ஆகவும் சாட்சிகளாக வா .சா.2 மற்றும் வா.சா..3 ஆக விசாரிக்கப்பட்டும் சான்றாவணங்கள் வா .சா. ஆ 1 முதல் வா.சா. ஆ 17 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

03. தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவென்றால் இந்த வழக்கு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

04. தீர்வு:

வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிகள் தரப்பு சாட்சிய சான்றாவணங்களை அனுசரித்து வாதிகளின் வழக்கை அனுமதிக்கும்படி வாதுரை செய்தார்.

05. வாதிகள் தனது வழக்கை நிரூபிக்கும் வகையில் 2 ம் வாதி வா .சா. 1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.,1 ன் சாட்சிய சங்கதி என்னவென்றால் அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் திருக்கோயில் 200 ஆண்டுகள் பழமைவாய்ந்த திருக்கோயில் ஆகும். ஸ்ரீ அங்காளம்மன் தெய்வத்தை செங்குந்த முதலியார் , பிராமணர், விஸ்வகர்மா, ஆசாரி மற்றும் பண்டாரம் குலத்தைச் சேர்ந்தவர்கள் வழிபட்டு வருவதாகவும் ஸ்ரீ அங்காளம்மன் தேவஸ்தானத்தை வாதியின் மூதாதையர்கள் கட்டியதாகவும் ஸ்ரீ அங்காளம்மன் தேவஸ்தானம் மேட்டுப்பாளையம் தாலூக்கா , இரும்பரை கிராமத்தில் அமைந்துள்ளது. மேற்படி இரும்பரை கிராமத்தில் 170 குடும்பங்கள் உள்ளன . 170 குடும்பங்களில் நான்கு குடும்பங்களை சேர்ந்தவர்கள் ஸ்ரீ அங்காளம்மன் தெய்வத்தை வழிபட்டு வருவதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்

மேலும் அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மனை தரிசிப்பவர்கள் என்ற முறையில் பல்வேறு குலத்தைச் சேர்ந்த வாதிகள் தங்களுடைய சொந்த உரிமையில் அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் தேவஸ்தானத்தையும், அதனுடைய சொத்துக்களையும் நிர்வகித்து வந்து கார்த்திகை ஜோதி, பொங்கல், தமிழ்வருட பிறப்பு, ஆடிபெருக்கு, சிவன்ராத்திரி, பௌர்ணமி,அம்மாவாசை, தீபாவளி, தசமி, மார்கழி மாத பூஜைகள் மற்றும் விநாயகர் சதுர்த்தி ஆகிய பண்டிகைகளை ஒவ்வொரு வருடமும் மற்றும் அன்றாட பூஜைகளையும் செய்து வருவதாகவும் அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் தேவஸ்தானம் தமிழ்நாடு இந்துசமய அறநிலையத் துறைக்கு கட்டுப்பாட்டில் இல்லாத தேவஸ்தானம் என்றும், அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் தேவஸ்தானத்திற்கு அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் உள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் ஏ. முருகேசன் என்பவர் இரும்பறை கிராமத்தை சேர்ந்தவர் என்பதால் அவரிடம் தேவஸ் தானத்திற்காக பொது மக்களிடம் வசூல் செய்த பணத்தையும் வாடகையையும் ஒப்படைத்ததாகவும் ஆனால் அவர் தன்னுடைய தனிப்பட்ட செலவுகளுக்கு வைத்துக் கொண்ட காரணத்தினால் அன்றாக பூஜைகளை உறுப்பினர்களே தங்களுடைய சொந்த பணத்தைக் கொண்டு நிர்வாகம் செய்து வருவதாகவும் 3ம் பிரதிவாதியை வாரிசாக விட்டு முருகேசன் இறந்துவிட்டதாகவும் அவர் இறந்ததற்கு பின்னிட்டு முருகேசனின் மனைவி 3ம் பிரதிவாதி தான் மட்டும்தான் தேவஸ்தானத்திற்கு பொறுப்பு என்று கூறி பறைச்சாற்றி வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் தேவஸ்தானத்திற்கு பூஜைகள் செய்ய 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு எந்தவிதமான உரிமையும் கிடையாது 3 முதல் 6 பிரதிவாதிகள் பணபலம் மற்றும் அரசியல் பலம் கொண்டவர்கள் என்பதால் சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டு வாதிகள் செய்யும் பூஜைகளை தடுப்பதற்கு முயற்சி செய்து வருவதாகவும் பொது மக்களிடமிருந்து வசூல் செய்யும் தொகைகளையும், வாடகைதாரர்களிடமிருந்து வசூல் செய்யும் வாடகையையும் தேவஸ்தானத்திற்கும் , தெய்வத்திற்கும் செலவு செய்ய வேண்டுமே தவிர தன்னுடைய தனிப்பட்ட செலவினங்களுக்கு செலவு செய்யக்கூடாது என்றும் தேவஸ்தானத்திற்கு தனியாக வங்கி கணக்கு கிடையாது

என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் வா.சா. 1ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாக வா.சா. 2 மற்றும் வா.சா. 3 ஆகியோர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள்.

மேற்படி வா.சா. 1 முதல் வாசா.3 ன் சாட்சியமும் அதனை உறுதிப்படுத்தும் விதமாக வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ.17 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி தங்களது தரப்பு வழக்கை எடுத்துரைக்கவோ உரிய சாட்சிய மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவோ முன்வரவில்லை. மேலும் பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தன் தரப்பு ஆட்சேபனையை தெரிவிக்கவில்லை என்பதால் வழக்குரை சங்கதிகளிலிருந்து பிரதிவாதிகள் உட்கிடையாக ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பது மட்டுமில்லாமல் வாதிகள் தன் தரப்பு வழக்கை சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் முடிவிற்கு வந்து வாதிகளின் வழக்கை அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. ஆகவே, வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

06. முடிவாக,

1. வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, 1ம் வாதி கோவிலின் 2 முதல் 11 வாதிகள் தான் கமிட்டி உறுப்பினர்களென விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. 3 மற்றும் 4 பிரதிவாதிகள் தாவா சொத்தில் உள்ள அசையும் பொருட்களை 2 முதல் 11 வாதிகள் வசம் ஒப்படைக்க வேண்டுமென செயலுறுத்துக்கட்டளை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது,

3. 3 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது,

4. வழக்கின் செலவுத் தொகையை பிரதிவாதிகள் வாதிகளுக்கு செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2024 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 28 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-K.Palanivel,
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 08.07.2018 | நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் வழங்கிய அடங்கல் | அசல் |
| வா.சா.ஆ.2 | | நிலபரப்பு வரைபடம் | உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | 30.01.2012 | மகா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ் | அசல் |
| வா.சா.ஆ.4 | 28.11.2019 | இந்து அறநிலையத் துறை இணை ஆணையர் அவர்களுக்கு அனுப்பிய புகார் | நகல் |
| வா.சா.ஆ.5 | 20.12.2019 | இந்து அறநிலையத் துறை இணை ஆணையருக்கு அனுப்பிய கடிதம் | அசல் |
| வா.சா.ஆ.6 | 20.12.2019 | உள்ளூர் நிர்வாக அமைச்சருக்கு 2-ம் வாதி கொடுத்த புகார் மனு | நகல் |
| வா.சா.ஆ.7 | 23.12.2019 | மாவட்ட வருவாய் அலுவலர் இந்து அறநிலையத்துறை இணை ஆணையருக்கு அனுப்பிய கடிதம் | நகல் |
| வா.சா.ஆ.8 | 08.01.2020 | இந்து அறநிலையத்துறை இணை | நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | ஆணையர் உதவி ஆணையருக்கு கொடுத்த கடிதம் | |
| வா.சா.ஆ.9 | 18.02..2020 | இந்து அறநிலையத்துறை உதவி ஆணையர் 2 ம் வாதிக்கு அனுப்பிய கடிதம் | நகல் |
| வா.சா.ஆ.10 | 14.12.2020 | 2-ம் வாதி இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையருக்கு அனுப்பிய புகாரின் | நகல் |
| வா.சா.ஆ.11 | 16.03.2020 | இந்து அறநிலையத் துறை உதவி ஆணையர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய கடிதம் | நகல் |
| வா.சா.ஆ.12 | 18.06.2020 | 2 ம் வாதி இரும்பொறை பஞ்சாயத்து தலைவருக்கு கொடுத்த கடிதம் | நகல் |
| வா.சா.ஆ.13 | 07.12.2021 | இந்து அறநிலையத்துறை ஆணையர் இணை ஆணையருக்கு கொடுத்த கடிதம் | நகல் |
| வா.சா.ஆ.14 | 11.10.2023 | மின் வாரிய செயற்பொறியாளருக்கு , அருள்மிகு ஸ்ரீ அங்காளம்மன் கோயிலின் செயற்குழு உறுப்பினர் . தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ்அனுப்பிய தகவல் கேட்பு மனு | அசல் |
| வா.சா.ஆ.15 | - | சிறுமுகை காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கு போலிசார் கொடுத்த மனு இரசீது | அசல் |
| வா.சா.ஆ.16 | -- | 3 ம் வாதி மற்றும் தங்கவேல் பெயரில் உள்ள வங்கி கணக்கு விபர பட்டியல் | அசல் |
| வா.சா.ஆ.17 | - | நன்கொடை வழங்கும்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் எண்ணிக்கை 8 தாள்கள் | அசல் |

## சாட்சிகள் பட்டியல்

| வாதிகள் தரப்பில் | பிரதிவாதிகள் தரப்பில் |
|---|---|
| வா.சா.1. திரு.பி.கே.நடராஜன் | --இல்லை-- |
| வா.சா.2. திரு,பேச்சிமுத்து | |
| வா.சா.3. பழனியப்பன் | |

Sd/-K.Palanivel,
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,